*World Christian Fellowship*
www.wcflondon.com
wcflondon@gmail.com

# கலாத்தியர்

## பாடம் 16 ஏன் தேவன் நியாயப்பிரமாணங்களை கொடுத்தார்?

***கலாத்தியர் 3:1-3, புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப் பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே.2. ஒன்றை மாத்திரம் உங்களிடத்தில் அறியவிரும்புகிறேன்; நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்?3. ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?***

*இரட்சிப்பு என்பது விசுவாசத்தால் மட்டுமே.*

- ✓ *கிரியைகள்,*
- ✓ *பண்டிகைகள்,*
- ✓ *நன்னடத்தை,*
- ✓ *நற்கிரியைகள்,*
- ✓ *மத சடங்குகள்,*
- ✓ *தேவாலய ஆராதனை மற்றும்*
- ✓ *மத விழாக்களை கடைபிடித்தல் ஆகியவற்றால் அல்ல.*

***இரட்சிப்பு என்பது விசுவாசத்தால் மட்டுமே.***

*ஆபிரகாம், அல்லது பழைய ஏற்பாட்டில் உள்ள எந்த பரிசுத்தவான்கள் யாரவது, அல்லது தற்போது உள்ள கிறிஸ்தவர்கள் எவராயினும் இரட்சிப்பு உண்டானது விசுவாசத்தால் மட்டுமே.*

*எப்போதுமே இரட்சிப்பு என்பது விசுவாசத்தால் மட்டுமே.* ***ஆபகூக் 2:4, "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்று பழைய ஏற்பாட்டில் வேதம் தெளிவாக சொல்லுகிறது****.*

***ரோமர் 4:6, அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத் தைக் காண்பிக்கும் பொருட்டு;***

***ஆபிரகாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டார்.***
***ஆபிரகாம் விசுவாசத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டார்.***
***ஆபிரகாமின் கணக்கில் தேவன் நீதியை சேர்த்தார் ஏனென்றால் அவர் தேவனை விசுவாசித்தார்.***
***இரட்சிப்பு எப்போதுமே விசுவாசத்தால் மட்டுமே கிரியைகளினால் அல்ல.***

*இரட்சிப்பு விசுவாசத்தால் மட்டுமே கிரியைகளினால் அல்ல, நியாயப்பிரமாணங்களை கடைபிடிப்பதால் அல்ல என்றால்* ***தேவன் ஏன் நியாயப்பிரமாணங்களை கொடுத்தார்?***

***கலாத்தியர் 3:19, அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளை யிடப்பட்டது.***

*இரட்சிப்பு விசுவாசத்தால் மட்டுமே என்றால் ஆபிரகாம் விசுவாசம் கொண்டிருந்தார், எனவே தேவன் ஆபிரகாமின்*

*கணக்கில் நீதியை சேர்த்தார் அது ஆபிரகாமின் பாவத்தை நீக்கி அவருக்கு நீதியை தந்தது. இவையெல்லாம் ஆபிரகாமின் காலத்தில் நடந்தது என்றால் இயேசு கிறிஸ்து ஏன் ஆபிரகாமின் காலத்தில் வரவில்லை?*

*அபிராகாமிற்கு விசுவாசம் இருந்தத, கிறிஸ்து அப்போதே வந்து பலியை செலுத்தி இருக்கலாமே?*

*ஏன் நியாயப்பிரமாணம் வர வேண்டும்?*

*கிறிஸ்து வருவதற்கு 1,500 வருடங்களுக்கு முன் ஏன் நியாயப்பிரமாணம் அளிக்கப்படவேண்டும்?*

*இரட்சிப்பு விசுவாசத்தால் என்றால், விசுவாசிப்பவர்கள் மேல் நீதி செலுத்தப்படும் என்றால், நீங்கள் நியாயப் பிரமாணம் மூலம் இரட்சிக்கப்பட முடியாது என்றால், அப்பொழுது ஏன் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது?*

*ஆபிரகாமின் உள்ளத்தில் விசுவாசம் இருந்தபோது அவருக்கு ஏன் வெளிப்புறமான நியாயப்பிரமாணம்??*

*ஆபிரகாமுக்கு மிகவும் எளிமையான விசுவாசம் இருந்தது. நியாயப்பிரமாணம் வெளிப்புறமானதாக இருந்ததால் சிக்கலானது.*

*வாழ்க்கையை ஏன் கடினமாக்குகிறது?*

*ஆபிரகாமின் உண்மையான மகன்கள் விசுவாசமுள்ளவர்கள்* ***கலாத்தியர் 3:19 ல் காணலாம்.***

## *ஏன் நியாயப்பிரமாணம்?*

*தேவன் நியாயப்பிரமாணத்தை வலியுறுத்தி தீவீரமாக பின்பற்ற சொன்னார். அவர் ஒரு நோக்கத்தோடு தான் நியாயப்பிரமாணத்தை கொடுத்தார்.*

*தேவன் நியாயப்பிரமாணத்தை வெளிப்படையாக தெரியும் வகையில் ஒரு மகத்தான மற்றும் அதிர்ச்சியான சூழ்நிலையில் கொடுத்தார், அது மக்களின் மனதில் நீங்காத வடுவாக என்றும் நிலைத்தது.*

*தேவன் சீனாய் மலையில் மோசேக்கு கற்பனைகளை கொடுக்கும் போது நடந்ததை நினைவில் கொள்ளுங்கள்,*

- *அங்கு இடி முழக்கங்கள்,*
- *அங்கு மின்னல்கள்,*
- *அங்கு பூமியதிர்ச்சி மற்றும்*
- *அங்கு எக்காள சத்தம் கேட்டது.*

*தேவனுடைய தூதர்கள் நியாயப்பிரமாணத்தை கீழே கொண்டு வந்தனர். மலையானது அக்கினியால் பற்றியெறிந்து, புகைகளும் மற்றும் அதிர்ச்சியும் உண்டானதை மக்கள் பார்த்தனர், அவர்கள் மலையருகே நெருங்க வேண்டாம் என எச்சரிக்கப்பட்டனர் ஏனென்றால் நெருங்கினால் அவர்கள் மரித்து போவார்கள்.*

*அபிரகாமிற்கு தேவன் கொடுத்த உடன்படிக்கை, அதாவது இஸ்ரவேல் ஜனம் அடிமைத்தனத்திலிருந்து மீள ஆண்டுகள் ஆகும் என கூறும் போது அது தேவனுடன் ஒரு இரகசிய சந்திப்பு ஆகும், அது வெளிப்படையான சந்திப்பு அல்ல.*

*ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார்.*
*தேவன் அபிராகாமிடம் வந்தார்.*
*தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் தந்தார்*
*தேவனுக்கும் ஆபிரகாமுக்குமான இரகசிய சந்திப்பு.* ***(ஆதியாகமம் 12)***

*பிறகு தேவன் உடன்படிக்கை செய்ய முடிவு செய்த பின்பு, கர்த்தர் ஆபிரகாமை ஆழ்ந்த உறக்கம் கொள்ளும் படி செய்தார். ஆபிரகாம் உறங்கி கொண்டு இருந்தார்.*
*தேவன் மிருகங்களின் இரத்தம் வழியாய் கடந்து சென்று உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அந்த அளவற்ற தன்மை கொண்ட உடன்படிக்கையை தேவன் முத்தரித்தார்.* ***(ஆதியாகமம் 15)****.*

*இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாக தெரிகிறது இதற்கு மறு ஆலோசனையோ, மறுபரிசீலனையோ இல்லை.*

## *பிறகு ஏன் நியாயப்பிரமாணம்?*

***வ 19, " ஏன் தேவன் நியாயப்பிரமாணங்களை கொடுத்தார்?"***

***தேவனின் பரிசுத்தத்தை காண்பிப்பதற்காகவே.***

***இரட்சகருக்கு ஒரு பெரிய எதிர்பார்ப்பு மற்றும் அவரின் தேவையை உணர்த்துவதற்காகவே****. இது மனிதனின் பாவங்களை உணர்த்துவதன் மூலமாகவே சாத்தியமாகும்.*

*மனிதன் பாவத்தை உணரும் போது தான், இரட்சகரை நோக்கி செல்லும் ஒரு தாகத்தை, ஏக்கத்தை அவனுக்குள் ஏற்படுத்தும்.*

*நியாயப்பிரமாணம் மிக முக்கியம். அபிராகாமிற்கு விசுவாசம் இருந்தது, பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம் மற்றும் ஒரு சிலருக்கு தான் விசுவாசம் இருந்தது, ஆனால் ஒரு கூட்ட மக்களோ அல்லது சமூகமோ, இரட்சகருக்காக ஒரு முக்கியத்துவத்தை கொடுக்கும் வகையில் மக்களை உற்சாக படுத்த, அழுத்தம் கொடுக்க யாரும் இல்ல.*

*ஆபிரகாம் தேவன் மேல் விசுவாசம் வைத்தார், அது தேவன் நேரிடையாக தலையீடு செய்த விஷயம்.*
*நோவா தேவன் மேல் விசுவாசம் வைத்தார், தேவன் தனிப்பட்ட வகையில் அவரை சந்தித்தார்.*

*அந்த காலத்தில் இல்லாத ஒன்று என்னவென்றால், மக்களை தேவனுக்கு நேராய் வழி நடத்த,இரட்சகரை நோக்கி உற்சாக படுத்த ஒரு உத்வேகம் இல்லை.*

*நோவா 120 வருஷம் பிரசங்கித்தார். ஆனால் ஒருவரும் தேவன் மேல் விசுவாசம் வைக்கவில்லை.*

*அதனால் நியாயப்பிரமாணம் தேவை பட்டது, எனவே அது எல்லை கடந்து இருக்கும் போது தேவன் ஒவ்வொருவரையும் எதிர்த்து நிற்பார்.*

## ***நியாயப்பிரமாணத்தை தவறாக புரிந்து கொள்ளுதல்***

*நியாயப்பிரமாணம் என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் உபயோகப்படுத்த பட்ட போது மூன்று வகையான அர்த்தங்களை தருகிறது.*

***ரோமர் 3:19, மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும் படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டி ருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்.***

*இது முழு பழைய ஏற்பாட்டில் சங்கீதம் மற்றும் தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்ட முந்தைய வார்த்தைகளை எடுத்துக்காட்டுகிறதாய் இருக்கிறது.*

***மத்தேயு 5:17, "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.***

*இது பழைய ஏற்பாட்டின் ஒரு பகுதியை எடுத்துக்காட்டுகிறது.*

***லூக்கா 24:44, அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவை களெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே என்றார்."***

*இது மோசேயினால் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டின் ஒரு பகுதியை குறிக்கிறது, முதல் ஐந்து புத்தகங்கள் தோரா (Torah) என்று அழைக்கப்படும்.*

*உட்படுத்திக்கொள்ளுதல் என்பது கட்டளைகளை வேலை காரியங்களாக மாற்றி இரட்சிப்பின் கூலிக்கு வழிநடத்தி செல்வது ஆகும்.*

*உட்படுத்திக்கொள்ளுதல் என்பதற்கு கிரேக்க வார்த்தை இல்லை, எனவே பவுல் மோசேயின் பிரமாணங்களை குறிக்கும் வார்த்தையை சுட்டிக்காட்டும் போது அதை "நியாயப்பிரமாணத்தின் கிரியைகள்" என குறிப்பிடுகிறார்* ***(ரோமர் 3:20; கலாத்தியர் 2:16, 3:2, 5)****.*

*சில சமயங்களில் வெறும் நியாயப்பிரமாணம் என்று குறிப்பிடுகிறார். அவர் சொல்கிறார்,* **நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால்** *" (****ரோமர் 6:14****).*

*அதன் அர்த்தம் நீங்கள் நியாயப்பிரமாணத்தை பின்பற்ற வேண்டியதில்லை என்று அல்ல. இரட்சிப்பின் கூலியை அடைய இந்த வேலையை செய்யுங்கள் என்ற ஒரு பாரத்திற்கு கீழ் நீங்கள் இல்லை என்று அர்த்தம். எனவே*

*நீங்கள் புதிய ஏற்பாட்டில் எங்கெல்லாம் "நியாயப்பிரமாணம்" என்று வாசிக்கும் போது நீங்கள் உங்களை கேட்க வேண்டிய கேள்விகள்,*
*இது பழைய ஏற்படா?*
*அல்லது மோசேயினால் எழுதப்பட்டதா?*
*அல்லது சட்டரீதியாக மோசேயின் போதனைகளை தவறாக காண்பித்துவிட்டார்களா?*

*தேவன் இப்பொழுது மக்களை இரட்சிப்பது போல் இல்லாமல் பழைய ஏற்பாட்டில் வித்யாசமாக இரட்சித்தார் என்று யாரும் கூற முடியாது.*

*மோசேயின் கற்பனைகள் மூலம் வந்த இரட்சிப்பு, சுவிசேஷத்தின் மூலம் வந்ததை விட வித்தியாசமானது என்று நிறைய வேதாகம ஆசிரியர்கள் மற்றும் விசுவாசிகள் சொல்லுகிறார்கள்.*

*அதாவது பழைய ஏற்பாட்டில் நீதிமானாக்கப்பட்டவர்கள், கிருபையினால் விசுவாசத்தை கொண்டு தான் நீதிமான்களாக்கப்பட்டார்கள் என்று அனைவரும் ஒப்புக்கொள்வார் மற்றும் அது தேவனுடைய ஈவு. ஆனாலும் பலர் நியாயப்பிரமாணம் இப்படிப்பட்ட வழியில் இரட்சிக்கப்பட மனுஷனை அழைக்கவில்லை, அது இப்படிப்பட்ட கிரியைகளினால் தேவனின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளவும் மற்றும் அதை செய்வதால் தன்னுடைய இயலாமையை உணர்ந்து இரட்சகரிடம் கொண்டு சேர்க்கும் என்று சொல்லுகிறார்கள்.*

*அல்லது இன்னொரு கோணத்தில் பாப்போம், பல வேதாகம ஆசிரியர்கள் வாதாடும் விஷயம் என்னவென்றால் மோசேக்கு சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட உடன்படிக்கை, அதற்கு முன்பு அபிராகாமிற்கு கொடுத்த உடன்படிக்கையிலிருந்து முற்றிலும் வித்தியாசமானது மற்றும் கல்வாரியில் கொடுக்கப்பட்டது புதிய உடன்படிக்கை (நாம் வாழும் காலம்) என்றும் கூறுகின்றனர்.*

*அவர்கள் கூறும் வித்யாசம் என்னவென்றால் அபிராகாமிற்கு கொடுக்கப்பட்ட உடன்படிக்கை மற்றும் புதிய உடன்படிக்கையிலும் இரட்சிப்பு இலவசமாக விசுவாசத்தின் மூலம் பெற முடியும் கிரியைகள் இல்லாமல் என்று ஆனால் மோசேயின் பிரமாணங்களால் கொடுக்கப்பட்ட இரட்சிப்பு அல்லது ஆசீர்வாதம் விசுவாசத்தால் இல்லாமல் அதை நிறைவேற்றும் கிரியைகளின் பிரதிபலனாக இருந்தது என்று. எனவே நிறைவு பெற்ற கிரியைகள் மட்டுமே நிறைவுள்ள தேவனிடமிருந்து இரட்சிப்பை பெற்றுக்கொள்ள முடியும், எனவே யாராலும் அதை அடைய முடியாது, நியாயப்பிரமாணம் வெறும் நமக்கு பாவத்தை துயரத்தை உணர்த்துகிறது மற்றும் நம்மை ஆக்கினைக்குள்ளாக நியாயம் தீர்க்கிறது. இப்படித்தான் மோசேயின் பிரமாணங்களை*

*சபைகளில் இன்று காண்கிறார்கள், மற்றும் அது தவறான ஒன்று ஒரு சட்டரீதியான பரிசேயனை மோசேயிலிருந்து விலக்குகிறது,தோராவை மதங்களுக்கு எதிரானதாக பவுல் கலாத்தியாவில் காட்டியதாக, மற்றும் எல்லாவற்றிலும் மோசமாக தேவனை மக்களுக்கு எதிராளியாக, மக்கள் தான் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்கு தேவனின் இரக்கத்தை சார்ந்து கொள்ளாமல், அவரை போற்றாமல் தன்னை தான் மெச்சிக்கொள்ளவும் வழிவகுத்தது.*

## ***நியாயப்பிரமாணம்: கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்***

### ***கடந்த காலம்***

***வ 19," நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? அக்கிரமங் களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது."***

*முக்கிய வார்த்தை "**கூட்டப்பட்டு**". **Added** பழைய காலத்தை குறிக்க நியாயப்பிரமாணம் சேர்க்கப்பட்டது.*

*ஒரு காரியத்தை நன்றாக புரிந்து கொள்ளுங்கள் மோசேயின் கட்டளைகள், உடன்படிக்கை மற்றும் பிராமணங்கள், அபிராகாமிற்கு கொடுக்கப்பட்ட உடன்படிக்கையை புறக்கணித்து தள்ளவே இல்லை. அது சாதாரணமாக கூட்டப்பட்டு அது முடிக்கப்பட்டது.*

***வ 19*** *சொல்லுகிறது, " **கூட்டப்பட்டு**."*
***வ 17,*** *சொல்லுகிறது, "**430வருடங்களுக்கு பிறகு சேர்க்கப்பட்டது**."*

***கலாத்தியர் 3:17, ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்துவை முன்னிட்டு தேவனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்றுமுப்பது வருஷத்திற்குப்பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது.***

*ஆதியாகமம் 12 ல் அபிரகாமுடனான உடன்படிக்கை சொல்லப்பட்டுள்ளது மற்றும் மோசேயின் உடன்படிக்கை 430 வருடங்களுக்கு பிறகு நாம் யாத்திராகமம் 20ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்படுவதை காண்கின்றோம்.*

***அது ஆபிரகாமின் உடன்படிக்கையை அகற்றிவிட்டதா?***
***அது அதற்கு மதிப்பில்லாமல் ஆக்கியதா?***
***இல்லை.***

*இப்போது ஒரே இடத்தில் இரண்டு உடன்படிக்கைகள் உள்ளன.*

- *ஆபிரகாமுடனான உடன்படிக்கை அடிப்படையானது.*
- *ஆபிரகாமுடனான உடன்படிக்கை என்னவென்றால், தேவன் ஆசீர்வதிப்பதாக வாக்குறுதி அளித்தார்.*
- *தேவன் சொன்னார், "உன்னை ஆசீர்வதிப்பேன், பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும், பூமியிலுள்ள தேசங்களெல்லாம் ஆசீர்வதிப்பேன்."*
- *இது ஆசீர்வாத உடன்படிக்கையாக இருந்தது.*

*இது இரட்சிப்பின் வாக்குறுதியாகும் தேவன் அபிராகாமிற்கு இரட்சிப்பின் ஆசீர்வாதத்தை கொடுப்பதாக, அவரின்*

*சந்ததிக்கு, மற்றும் அவர் சந்ததி மூலம் மேசியா உலகத்திலுள்ள தேசங்களுக்காக வருவார் என்று இருந்தது.*

*இது இரட்சிப்பின் வாக்குறுதியாகும், அது ஆசீர்வாதத்தின் வாக்குறுதியாகவும் இருந்தது.*

*எனவே தான் பவுல் நீதிமானாக்கப்படுத்தல் குறித்து விளக்கும் போது, எப்போது அவர் நீதிமாணாக்கப்படுதல் அல்லது இரட்சிப்பை குறித்து பேசும்போதும், அவர் மோசேயின் உடன்படிக்கையை சுட்டிக்காட்டுவதில்லை, அவர் அபிரகாமுடனான உடன்படிக்கையை தான் சுட்டிக்காட்டுவார்.*
*அவர் மோசேயை நோக்கி செல்வதில்லை*
*ஆபிரகாமை நோக்கி செல்லுவார்.*

***கலாத்தியர் 3:6-9,6. அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. 7. ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக. 8. மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான் களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது.9. அந்தப்படி விசுவாச மார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப் படுகிறார்கள்.***

***வ 6, "அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது."***

***வ 7, "ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக."***
*நாம் விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கப்பட்ட போது,*

*விசுவாசத்தால் இரட்சிக்கப்பட்ட அபிரகாமிற்கு, நாம் ஆவிக்குரிய வகையில் அவரின் சந்ததியாக மாற்றப்படுகிறோம்.*

***வ 9, "அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்."***

*வேதாகமத்தில் எங்கேயும் யாரும் மோசேயின் மூலம் ஆசீர்வதிக்கப்படவில்லை.*

- ✓ *ஆபிரகாம் ஆசீர்வாதத்தை கொண்டு வந்தார்.*
- ✓ *மோசே சாபத்தை கொண்டு வந்தார்.*

- ➢ *ஆபிரகாமின் உடன்படிக்கை சொல்லுகிறது "நான் உன்னை ஆசீர்வதிப்பேன்."*
- ➢ *மோசேயின் உடன்படிக்கை சொல்லுகிறது "நான் உன்னை சபிப்பேன்."*

*இதோ என் நியாயப்பிரமாணங்கள், இதை நீ கடைபிடிக்காவிட்டால் அதற்காக உன்னை சபிப்பேன்.*

*கூட்டப்பட்ட மோசேயின் உடன்படிக்கை எந்த வகையிலும் அபிரகாமுடனான உடன்படிக்கையை அபத்தமாக்கவில்லை.*

*இது அதை மருவடிமைக்கவோ அல்லது மாற்றவோ இல்லை.*

***வ 14** சொல்லுகிறது, யாரெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறார்களோ அவர்கள் ஆபிரகாமின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வார்கள் என்று."*

*நீங்கள் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள கிறிஸ்துவுக்குள் வரும்போது, தேவன் அபிராகாமிற்கு கொடுப்பேன் என்று சொல்லிய எல்லா ஆசீர்வதங்களும் பெற்றுக்கொள்வீர்கள்.*

*மீட்பின் வரலாற்றில், தேவன் இரட்சிப்பை வாக்களித்தார், அதை அவர் அபிராகாமிற்கு கொடுத்தார், ஏனென்றால் ஆபிரகாமின் சந்ததியில் பிறப்பவர் தான் இரட்சகர்.*

*மத்தேயு 1 ல் சொல்லப்பட்ட இயேசுவின் வம்ச வரலாற்றில், அது சொல்லுகிறது அவர் ஆபிரகாமின் குமாரன்.*
*"ஆபிரகாமின் வழியில் இரட்சகர் வருவார், அவர் மூலம் இரட்சிப்பு ஆபிரகாம் மற்றும் ஆபிரகாமின் சந்ததியில் உள்ள விசுவாசிகள் எல்லாருக்கும் அதுமட்டுமில்லாது எல்லா தேசங்களிலும் விசுவாசிப்பவர்கள் எல்லோருக்கும் வருகிறது."*

*அது ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட இரட்சிப்பின் வாக்குறுதியாகும். எனவே, நீங்கள் கிறிஸ்துவில் இருக்கும்போது ஆபிரகாமுக்கு முதலில் கொடுக்கப்பட்ட இரட்சிப்பின் வாக்குறுதியில் கலந்து கொள்ளுங்கள்.*

*அந்த வாக்குறுதியை மோசேயின் உடன்படிக்கை ஒதுக்கி வைக்கவில்லை.*

## தேவன் ஏன் மோசேயின் உடன்படிக்கையை கொடுத்தார்?

*ஏனென்றால் ஆபிரகாமின் உடன்படிக்கை உலகளாவிய மனிதனின் பாவத்தால் நிறைவுக்குள்ளாக்கப்படாமல் இருந்தது.*

தேவன் ஆபிரகாமுக்கு நிச்சய உடன்படிக்கை செய்யும் போது அவர் ஆசீர்வதிப்பேன் என்று சொல்லி ஊக்குவித்தார், ஆனால் உண்மையில் அப்போது மக்களை ஊக்குவிக்க வேறு எதுவும் இல்லை.

ஆபிரகாம் தேவனால் ஊக்குவிக்கப்பட்டார் ஏனென்றால் தேவனின் நேரிடையான வழிகாட்டுதல் அவருக்கு வாழ்வில் இருந்தது.

தேவனின் கட்டளைகளை மீறுவதால் உலகம் சாபத்திற்குள்ளானது என்ற உண்மையை கூறி இரட்சகர் மற்றும் மீட்பர் தேவையை உணர்த்தும் உலகளாவிய கோட்பாடுகள் எங்கே?

- ✓ ஆபிரகாமின் உடன்படிக்கையில் தேவன் சொல்லுகிறார் "நான் ஆசீர்வதிப்பேன்."
- ✓ மோசேயின் உடன்படிக்கையில் தேவன் சொல்லுகிறார் "நான் சபிப்பேன்."
- ✓ ஆபிரகாமின் உடன்படிக்கையில் தேவன் சொல்லுகிறார் "நான் செய்வேன்."
- ✓ மோசேயின் உடன்படிக்கையில் தேவன் சொல்லுகிறார் "நீங்கள் செய்யவேண்டும்."
- ✓ ஆபிரகாமின் உடன்படிக்கையில் உங்களுக்கு வாக்குத்தத்தம் உண்டு.
- ✓ மோசேயின் உடன்படிக்கையில் உங்களுக்கு அச்சுறுத்தல் உண்டு.

ஆபிரகாமின் உடன்படிக்கையில் வெளிப்படையாக காட்ட ஏதுமில்லை

- ➢ தொலைந்த போன மனிதனின் நிலை,

- சுயமாக மீட்டுக்கொள்ளும் தன்மை இல்லை மற்றும்
- கிறிஸ்துவின் தியாகத்தை அறிந்து கொள்ள மற்றும் புரிந்து கொள்ள.

நாம் முதலாவது சாபத்தை புரிந்து கொள்ள கிறிஸ்துவின் முக்கியத்துவத்தை பற்றிக்கொள்ள வேண்டும், பாவிகளின் சாபத்தை ஏற்றுக்கொண்டு மற்றும் பாவிகளுக்கு தனது நீதியை தருவது.

எனவே ஆபிரகாமின் உடன்படிக்கையோடு மோசேயின் உடன்படிக்கையும் கூடுதலாக சேர்க்கப்பட வேண்டும் அதன் மூலம் மனிதன் இரட்சிக்கப்பட விசுவாசம் மற்றும் மனம்திரும்புதல் இரண்டும் வேண்டும் என்பதை புரிந்துகொள்வான்.

"நான் தேவனை விசுவசிக்கிறேன்" என்று சொல்லும் மக்களை நமக்கு தெரியும். தேவனை விசுவாசிக்கும் ஏராளமான யூதர்கள் உள்ளனர், அவர்கள் பழைய ஏற்பாட்டின் தேவனையும் ஏற்றுக்கொள்வார்கள். கேள்வி என்னவென்றால் அவர்கள் பாவத்திலிருந்து மனம் திரும்பினார்களா? இல்லையா ? என்பது தான்?

விசுவாசத்தை காத்துக்கொள்ள அது தான் சிறந்த வழி. இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்த தியாகத்தை புரிந்து கொள்ள மனந்திரும்புதல் தான் உதவும்.

பழைய ஏற்பாட்டில் இரட்சிப்பு என்பதை இரண்டு வகையாக பிரிக்கலாம்,

- ✓ ஆபிரகாமுடனான வாக்குறுதியின் உடன்படிக்கை மற்றும்
- ✓ மோசேயுடன் நியாயப்பிரமாண உடன்படிக்கை.

*பழைய ஏற்பாடு முழுவதும் ஆசீர்வாதம் மற்றும் சபித்தல். இது நேர்மறை மற்றும் எதிர்மறை.*

*நீங்கள் கிறிஸ்துவிடம் வரும்போது, அவர்தான் தேவன், கர்த்தர், மீட்பர் மற்றும் இரட்சகர் என்று விசுவாசிக்கும் போது அது நேர்மறை தான்.*

*நீங்கள் மிகவும் உடைந்த நிலையில் வருந்துகின்ற இருதயத்தோடு, குற்றமுள்ள மனதோடு, தீயவைகளோடு, மற்றும் பாவத்தோடு தேவனிடம் வரும்போது அது எதிர்மறை.*

- ✓ *ஆபிரகாமின் உடன்படிக்கையோடு ஜீவன் உள்ளது.*
- ✓ *மோசேயின் உடன்படிக்கையோடு மரணம் உள்ளது.*

***வ21****, சொல்லுகிறது நியாயப்பிரமாணம் உயிரை கொடுக்கவில்லை."*

***2 கொரிந்தியர் 3:6-7****, "****நியாயப்பிரமாணம் கொல்லுகிறது.****"*
*எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசே என்று பவுல் அழைக்கிறார்.*

*மோசேயின் உடன்படிக்கை பின்பு சிலுவையில் உச்சத்தை அடைகிறது.*

***வ 13, கிறிஸ்து நமக்காக சாபமாக மாறுகிறார்****!*
*நம்முடைய பாவங்களினால் உண்டான ஒட்டுமொத்த தேவ கோபாக்கினையையும் கிறிஸ்து சிலுவைக்கு சென்று ஏற்றுக்கொள்கிறார். மோசேயின் உடன்படிக்கையின் உச்சம் தான் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம், ஏனென்றால்*

*அவர் நமக்காக சாபமாக மாறுகிறார், சிலுவையில் மறித்து, நம்முடைய பாவத்தினால் உண்டான தேவ கோபாக்கினையை ஏற்றுக்கொண்டார்.*

*ஆபிரகாமின் உடன்படிக்கையின் உச்சக்கட்டம் உயிர்தெழுதலில் உள்ளது! உயிர்தெழுதலின் வாக்குத்தத்தின் மூலம் நாம் ஆசீர்வாதமான வாழ்க்கையை பெற்றுக்கொள்ள முடியும்.*

*நாம் மரணத்தைப் பெற்றோம், கிறிஸ்துவில் சிலுவையில் மரித்தோம்.*
*நாம் வாழ்க்கையைப் பெற்றோம், வாழ்க்கையின் புதிய நிலையில் அவருடன் நடக்க எழுந்தோம்.*

- ➢ *மோசேயின் உடன்படிக்கை இயேசு கிறிஸ்துவின் மரணதண்டனை மூலம் உச்சக்கட்டம் அடைகிறது, மற்றும்*
- ➢ *ஆபிரகாமின் உடன்படிக்கை இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுவதினால் உச்சக்கட்டம் அடைகிறது.*

- ✓ *ஆபிரகாமில் நம்பிக்கை வலியுறுத்தப்படுகிறது*
- ✓ *மோசேயில் மனந்திரும்புதல் வலியுறுத்தப்படுகிறது.*

*மாற்கு சுவிசேஷத்தை துவக்கும் போது*
***மாற்கு 1:15**, "**மனம்திரும்பி விசுவாசியுங்கள்**."*

*நியாயப்பிரமாணம் பழைய காலத்தில் ஒரு கூட்டாக சேர்க்கப்பட்டது என்று அறிந்து கொள்ளலாம். அது ஆபிரகாமின் உடன்படிக்கையை அகற்றாது ஆசீர்வாதம் மற்றும் சாபத்தை ஒருவர் நன்றாக புரிந்து கொண்டு நம்முடைய விசுவாசம் மற்றும் மனம்திரும்புதலை*

*ஏற்றுக்கொண்டு நம்மை இரட்சிக்கும் தேவனிடம் கொண்டு சேர்க்கும் படியாக அவைகள் கூட்டாக சேர்க்கப்பட்டது.*

## *எதிர்காலம்:*

***வ 19, அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது.***

*இந்த வார்த்தையை கவனியுங்கள் "**வருமளவும்** " அல்லது ஒருசில மொழிபெயர்ப்பில் "**வந்து சேரும் வரையில்**" வருமளவும் என்றால் அதற்கென்று ஒரு கால அளவு உண்டு என்று அர்த்தம்.*

- *அது நிரந்தரம் அல்ல.*
- *அது என்றைக்கும் அல்ல.*
- *அது தற்காலிகமானது.*

***வ 16, விதை கிறிஸ்து.***

*ஒட்டுமொத்த மோசேயின் பிரமாணங்கள்*

- *விழாக்கள்,*
- *சடங்குகள்,*
- *ஆசாரியத்துவம்,*
- *பலியிடுதல் மற்றும்*
- *பிற மத சடங்குகள்*

*எல்லாவற்றிக்கும் ஒரு குறிப்பிட்ட கால அளவு இருந்தது.*

*பவுல் இதை நிழல் மற்றும் கிறிஸ்துவை பற்றியது என்று கூறுகிறார்.*

***கொலோசெயர் 2:17, அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது.***

*நியாயப்பிரமாணம் கிறிஸ்துவை எதிர்பார்த்து இருக்கிறது, அது அவரை காட்டிக்கொடுக்கிறது மற்றும் அது அவரில் நிறைவேறுகிறது.*

*ஒரு குறிப்பிட்ட நியாயப்பிரமாணம் பற்றி பேசவேண்டுமானால் சடங்குகளை குறித்த நியாயப்பிரமாணம் பற்றி பேசலாம்,*

- ✓ *எல்லா பலியிடும் முறைமைகள்,*
- ✓ *எல்லா ஆசாரியத்துவம்,*
- ✓ *எல்லா ஓய்வுநாட்கள்,*
- ✓ *எல்லா புது நிலவுகள்,*
- ✓ *எல்லா விழாக்கள்,*
- ✓ *எல்லா பண்டிகைகள் மற்றும்*
- ✓ *அவையெல்லாம் கிறிஸ்துவை காண்பித்து கொடுத்தன.*

*இயேசு தான் அந்த எல்லா கற்பனைகள், வடிவங்கள் மற்றும் குறியீடுகளின் நிறைவு.*

***ரோமர் 10:4, " விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும் படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக் கிறார். "***

*இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். இயேசு அதை எல்லாவற்றையும் நிறைவேற்ற தான் வந்தார்!*

*பழைய உடன்படிக்கையின் காலத்திலும், மோசேயின் உடன்படிக்கை நடவடிக்கையில் இருந்த காலத்திலும்,*

*எரேமியா சொல்லுகிறார் புதிய உடன்படிக்கை தோன்றும் என்று, அந்த புதிய உடன்படிக்கை மோசேயின் உடன்படிக்கை அக அம்சங்களை மாற்றியமைக்கும் என்று. (படியுங்கள் **எரேமியா 31**)*

*நித்திய ஆசாரியாராகிய மேசியாவை குறித்து தாவீது தீர்க்கதரிசனமாக முன்னறிவித்தார்!*

***சங்கீதம் 110:4, நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார். "***

*பழைய ஏற்பாடு புதிய உடன்படிக்கை வருவதை கண்டது, அது மோசேயின் நியாயப்பிரமான உடன்படிக்கையை முடித்துவைத்து புதிய ஆசாரியத்துவத்தை கண்டது.*

*ஆசாரியத்துவம் எழுத்துரீதியாக லேவி கோத்திரத்திலிருந்து யூத கோத்திரத்துக்கு மாற்றப்பட்டது இதை I நாளாகமம் 5 அதிகாரத்தில் பார்க்க முடியும். ஆசாரியத்துவம் லேவி கோத்திர ஆரோனிலிருந்து யூதா கோத்திரத்திற்கு மாற்றப்பட்டது, இறுதியில் ஒட்டுமொத்தமாக ஆசாரியத்துவம் மெல்கிசேதேக்கின் முறைமையில் வருபவருக்கு மாற்றப்பட்டது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, அவர் புத்தம் புதிய ஆசாரியத்துவத்தை கொண்டு வந்தார்.*

***எபிரெயர் 7:12, ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்கு மேயானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும்.***

*எனவே எல்லா வெளிப்புறமான சடங்குகளும் ஆசாரியத்துவதோடு சேர்த்து எல்லாம் கிறிஸ்து வந்து மரித்ததோடு முடிவு பெற்று பெற்றது.*

- எனவே தான் கிறிஸ்து மரித்தபோது தேவாலயத்திலிருந்த திரைசீலை மேலிருந்து கீழாக கிழிந்தது.
- மகா பரிசுத்த ஸ்தலம் அகலமாக திறக்கப்பட்டது.
- பலியிடும் முறைமை முடிந்தது.
- தேவனை எப்போதும் எல்லாராலும் கிட்டி சேர முடியும்.
- பரிகாரம் செய்யும் நாள் இனி தேவை இல்லை.
- பஸ்கா பண்டிகை கொண்டாட்டம் இனி தேவை இல்லை.
- அதற்கு பதிலாக கிறிஸ்துவின் சிலுவை தியாகம் நினைவாக திருவிருந்து எடுத்துக்கொள்ளலாம்.
- பழைய ஆசாரியத்துவம் முடிவு பெற்றது.

கிறிஸ்து தான் புதிய ஆசாரியத்துவத்தின் ஆசாரியர்.

வெளிப்புறமான சடங்குகள் அதன் அம்சங்கள் எல்லா ஒழிந்தன.
ஆசாரியத்துவ மாற்றத்தால் நியாயப்பிரமானமும் மாற்றப்பட்டது.

எனவே நியாயப்பிரமாணம் என்பது, மோசேயின் கட்டளைகள் அவையெல்லாம் கூட்டிசேர்க்கப்பட்டன. எதிர்காலத்தை பொறுத்தவரை அது கிறிஸ்து வரும் வரை அது தாற்காலிகமானது.

- ✓ சடங்குகள் முடிந்தது.
- ✓ பாரம்பரியங்கள் முடிந்தது.
- ✓ ஆசாரியத்துவம் முடிந்தது.
- ✓ எல்லாமே முடிந்தது.

*கி.பி. 70ல் புறஜாதியினர் வந்து எருசலேமை அழித்தனர், அதன் பிறகு அங்கு பலியிடுதல் மற்றும் ஆசாரியத்துவம் இதுவரை நடைமுறையில் இல்லை.*

## *நிகழ்காலம்*

- *கடந்த காலத்தில் அது கூட்டப்பட்டது.*
- *எதிர்காலத்தை பொறுத்தவரை அது தற்காலிகமானது.*
- *நிகழ்காலத்தை பொறுத்தவரை அது ஒரு அறிவுறுத்தல்.*

*தேவனின் கட்டளைகள் நீதிகள் மாறாதவை.*
*அபிராகாமிற்கு முன்பும் அது சத்தியமானது, அபிராகாமிற்கும் மோசேக்கும் இடைப்பட்ட 430வருஷத்தில் அது சத்தியமானது, இன்றும் அவைகள் மாறாத சத்தியம்.*
*நமக்கு ஒரு பாக்கியம் என்னவென்றால் அவையெல்லாம் எழுதப்பட்டுள்ளது, பழைய ஏற்பாட்டின் பக்கங்களில் தேவனின் நீதி முறைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது, அதை புதிய ஏற்பாட்டிலும் சுட்டிக்காட்டி உள்ளனர். அந்த நியாயப்பிரமாணம் நமக்கு ஒரு முக்கிய காரணங்களுக்காக கொடுக்கப்பட்டுள்ளது.*

***வ 21, அப்படியானால், நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே; உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்த தானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே.***

*நியாயப்பிரமாணத்தை நம் வாழ்க்கையை வழிநடத்தாது. அது நம்மை சாதத்திற்கும் மரணத்திற்கும் ஆளாக்கும்.*

*ஆனால் வேதம் நம்மெல்லோரையும் பாவத்திற்குள் அடைத்துப்போட்டது.*

*நியாயப்பிரமாணம் முதலில் நமக்கு கற்று தருவது நாம் பாவிகள் என்று தான்.*

*மனுஷர் தங்கள் நிலையை புரிந்துகொள்வது மிக முக்கியம். சட்டங்களும் அதன் அம்சங்களும் ஒழிக்கப்பட்டுஇருக்கிறது. ஏனென்றால் அது இஸ்ரவேலருக்கு மட்டும் தனி அடையாளமாக கொடுக்கப்பட்டது.*

*தேவன் பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணம் கொடுக்கும்போது அதை இஸ்ரவேலுக்கு தான் கொடுத்தார்.*

***சங்கீதம் 147:19-20, யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரவேலுக்குத் தமது பிரமாணங்களையும் தமது நியாயங்களையும் அறிவிக்கிறார். 20. அவர் வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை; அவருடைய நியாயங்களை அறியாமற்போகிறார்கள். அல்லேலூயா!***

*தேவன் மோசேயின் பொருளாதாரங்களை கொடுக்கும்போது, அதை இஸ்ரவேலுக்கு ஒரு எல்லையை போன்று கொடுத்தார், அவர்களை உலகத்திலுள்ள மக்களிடமிருந்தும் அவர்களை சுற்றி இருந்த உலகத்திடமிருந்து பிரித்து காட்டு வண்ணம் கொடுக்கப்பட்டது. அவர்களின் குணாதிசயங்களை தடுத்து, கட்டுப்படுத்தவும், உலகத்துடன் கலவாத படி ஒரு தடையை போல செயல் படவும் அதை கொடுத்தார்.*

*அவருடைய நியாயப்பிரமாணத்தின் அம்சம் என்னவென்றால் அவர்களுக்கும் நமக்கும் அது ஒரு கண்ணாடி போல செயல்பட்டது.*

***யாக்கோபு 1:23, என்னத்தினாலெனில், ஒருவன் திரு வசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்;***

*நாம் தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்போது, அதற்கென்று ஒரு தரநிலை இருப்பதை நாம் பார்க்க முடியும். நாம் நம்முடைய வாழ்க்கை தரநிலையை பார்க்கும்போது நாம் எங்கயோ குறைந்து இருக்கிறோம் என்பது தெரிகிறது.*

***ரோமர் 3:19, மேலும், வாய்கள் யாவும் அடைக்கப் படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டி ருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்.***

*நியாயப்பிரமாணத்தின் சடங்குகள் முடிவு பெற்றது.*
*அதனுடைய நீதியின் பகுதி என்னவென்றால், அது தேவனுடைய குணாதிசயத்தை வெளிப்படுத்துகிறது, அது ஏற்கனவே உண்மையாகவே உள்ளது, எல்லா வகையான காலகட்டத்திலும், அது ஒரே நிலையில் தான் இருக்கிறது. அது இப்போது நமக்கு தெளிவாக பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்று எழுதப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது.*

*தேவனுடைய நீதி, தெய்வீகத்தன்மை மற்றும் ஆவிக்குரிய நிலைமை நமக்கு தெரியும். அவருடைய இந்த தரநிலையை பார்க்கும் போது நாம் அவருக்கு முன்பாக குற்றமுள்ள இருதயத்தோடு நிற்கிறோம். அந்த நியாயப்பிரமாணம் நமக்கு*

*ஒரு கண்ணாடியை போல இருந்தது என்று* ***கலாத்தியர் 3:10*** *சொல்லுகிறது நாம் அதை மீறினோம் நாம் சாபத்திற்குள்ளானோம்.*

*நாம் நம்முடைய இலக்கை இழந்தோம்.*

*புதிய ஏற்பாடு நமக்கு சொல்லுகிறது நாம் அதை அடைய முடியாது ஏனென்றால் நாம் குருடானவர்கள். நீங்கள் குருடானவர்கள் என்றால் எப்படி உங்களால் ஒரு குறியை நோக்கி தாக்க முடியும்?*

- *உங்களால் தேவனின் தரநிலைக்கு வரமுடியாது ஏனென்றால் உங்களால் அதை பார்க்க முடியாது.*
- *உங்கள் மனக்கண்கள் குருடானது.*
- *நீங்கள் அறிவில்லாதவர்கள்.*
- *உங்களால் தேவனுடைய காரியங்களை அறிய முடியாது.*
- *அவைகள் ஆவிக்குரிய வகையில் உணர்த்தப்பட்டு இருக்கின்றன.*
- *நீங்கள் ஆவியில் மரித்தவர்கள்.*
- *உங்கள் அறியாமை என்பது, பாவம் என்ன என்பதை உணராமல் மற்றும் சுயசித்தத்திற்காக போராட்டம் செய்யும் குணம். நீங்கள் ஒரு பாவி.*

***வ19****, சொல்லுகிறது அதற்கு தான் நியாயப்பிரமாணம் வந்தது. அது நம்முடைய மீறுதலினால் கூட்டப்பட்டது.*

*நியாயப்பிரமாணம் முழு நிறைவான சிறந்த கொள்கை கொண்டது!*

*அது அந்த கொள்கைகளை கட்டளையாக கொண்டது.*

*இது தான் தேவனின் தரநிலை!*
*இது வெறும் தேவனின் தரநிலை என்று சொல்லாமல் அதற்கு "நீங்கள் கீழ்படியதான் வேண்டும்" என்று சொல்லுகிறது."*

*இப்பொழுது நமக்கு என்ன நடக்கிறது என்று பார்ப்போம்?*
***இரண்டு காரியங்கள்!***

1. ***பாவத்தை அதிகரிக்கின்றது.***
   *ஒரு சிறு பிள்ளை பூங்காவில் நடந்து சென்று கொண்டு இருக்கும் போது அங்கு "புல்வெளியில் மேல் நடக்க வேண்டாம்" என்று எழுதிய வாசகத்தை காணும் போது, அவன் அந்த வாசகத்தை காணும் வரை அதை செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றி இருக்காது, அதை பார்த்த உடனே அதன் மேல் நடக்க தோன்றும். தீயவை என்னவென்று எடுத்துக்காட்டப்படும் போது அது நம்முடைய பொல்லாத எண்ணத்தை தூண்டுகிறது, சுவாபத்தை தூண்டுகிறது. எனவே நாம் ஒரு செயல் தவறு என்று அறிந்து கொள்ளும் வரை அதை செய்ய வேண்டும் என்ற எண்ணம் நமக்குள் வந்து இருக்காது.*

   *பவுல* ***ரோமர்*** *7 ல் சொல்லுகிறார், "* ***நான் தேவனுடைய பிரமாணங்களை நோக்கி செல்லும்போது அது எண்ணில் உள்ள பாவத்தை தூண்டியது****." அது எனக்குள் உள்ள பாவத்திற்கு புத்துயிர் கொடுத்தது. அது பாவத்தை தூண்டி எழுப்பியது.*

2. ***நம்மை குற்றவாளி என்று உணரவைத்தது.***
   *அதனுடைய நோக்கம் அது தான். நம்முடைய பாவத்தை தீவிரப்படுத்தி மற்றும் ஒரு பாவத்தால் உண்டான அவமான பாரத்தை உணரச்செய்து,*

*நம்முடைய நிலையை அறிய செய்தது. நியாயப்பிரமாணத்தின் வேலை அது தான்.*

**வ** *24, அது நம்மை கிறிஸ்துவிடம் வழி நடத்தி செல்லும் உபாத்தியாய் செயல்பட்டது என்று கூறுகிறது.*
***கலாத்தியர் 3:24, இவ்விதமாக, நாம் விசுவாசத்திலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது*.**

- *நீங்கள் நியாயப்பிரமாணத்தை கற்கும் போது தேவனின் முற்றும் நிறைந்த தரநிலையை அறிந்துகொள்வீர்கள்.*
- *நீங்களும் அந்த தர நிலையை பராமரித்து வாழ வேண்டும் என அவைகளை கட்டளைகளாக கொடுத்தார்.*
- *அந்த தர நிலையை பின்பற்றுவதை விட்டு விட்டு, அதை மேலும் மேலும் மீறி நடப்பதில் ஆர்வம் கொள்கிறீர்கள்.*
- *பிறகு நீங்கள் உங்கள் மேல் அளவற்ற குற்றத்தை உணர்கிறீர்கள், அந்த மீறுதலுக்காக வெட்கப்படுகிறீர்கள்.*
- *நீங்கள் தண்டனைக்குட்பட்டவராக உணர்கிறீர்கள்.*

*அதன் விளைவாக நீங்கள் நியாயப்பிரமாணம் வெறும் சாபத்தை தான் தருகிறது என்பதை உணர்கிறீர்கள், அதனால் நீங்கள் கிறிஸ்துவிடம் செல்லுகிறீர்கள். எனவே நீங்கள் விசுவாசத்தால், விசுவாசம் மூலம் மட்டுமே நீதிமானாக்கப்பட முடியும் என்பதை அறிகிறீர்கள்.*

*பாவம் முழுமையாக விளக்கப்பட்டுவிட்டது.*

*பாவம் உற்சாகப்பட்டு அல்லது தூண்டப்பட்டு குற்ற உணர்வு கொடுக்கப்படுகிறது.*
*நாம் பிரதான பாவிகள் என்ற முடிவுக்கு வருகிறோம்.*

*தேவனின் ஆவியானவர் தண்டனை குறித்து கண்டித்து, மற்றும் மனம் திரும்ப வைத்து நம்மை இரட்சகரிடம் வழி நடத்துகிறார்! வழி நடத்துபவராக!*

***வ13,*** *கூறுகிறது, "* ***கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்****."*

*தேவன் கிறிஸ்துவை சிலுவையின் மேல் சுமத்தினார்.*
*கிறிஸ்து உங்களுடைய மற்றும் என்னுடைய பாவங்களுக்காக மரித்தார்.*
*அது தான் கிறிஸ்தவ சுவிசேஷம்!*

***வ 29, நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கி றீர்கள்****.*

*அபிராகாமிற்கு செய்த உடன்படிக்கை ஒதுக்கிவைக்க படவில்லை.*
*அது இரட்சிப்பை குறித்த வாக்குத்தத்தம்.*
*நாம் கிறிஸ்துவிடம் வரும்போது, தேவன் அபிராகாமிற்கு கொடுத்த இரட்சிப்பின் ஆசீர்வாத வாக்குத்தத்திற்குள் நுழைகிறோம்.*

*வேதத்தின் பக்கங்களில் நமக்கு தெளிவாக கட்டளைகள் வரைமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளது, அதை மீறினவர்களை பற்றியும் சொல்லப்பட்டுள்ளது.*

*அதெயெல்லாம் பார்க்கும்போது நியாயத்தீர்ப்பு உள்ளது, அந்த நியாயத்தீர்ப்பு நித்தியமான விளைவுகளை உண்டாக்கும், நித்திய வேதனை, நரகத்தில் நித்திய வேதனை உண்டு.*

*நீங்கள் உங்களுக்கு வேண்டுமானால் தண்டனையை ஏற்றுக்கொள்ளலாம், இல்லையென்றால் உண்மையை அறிந்து கொண்டு மனம் திரும்பி கிறிஸ்து உங்களுக்காக செய்தததை உணர்ந்து விசுவாசித்து, கிறிஸ்து உங்களக்கு செய்ததிற்காக தேவனிடம் பாவங்களுக்காக மன்னிப்பு கேட்டால் நியாயம் தீர்க்கப்படமாட்டிர்கள்!*

*அந்த செய்தியை தான் நாங்கள் பிரசங்கித்து வருகிறோம்.*

*அபிரகாமிற்கு கொடுத்த வாக்குத்தத்தில், கிறிஸ்து இயேசுவின் மரணத்தால் ஆசீர்வாதம் நிறைவுபெற்றது.*

*மோசேயின் மூலம் வந்த சாபத்தால், நியாயத்தீர்ப்பு மற்றும் நரகம் உங்களால் நித்தியமாக நிறைவு பெறுகிறது.*

*அது தான் ஒரே வழி.*

***நீங்கள் உங்கள் சொந்த தண்டனையை ஏற்றுக்கொள்ளுங்கள்*** *அல்லது*
***கிறிஸ்துவை இரட்சகர் மற்றும் தேவனாக ஏற்றுக்கொள்ளுங்கள் மற்றும் அவர் உங்களுக்காக தண்டனையை ஏற்றுக்கொள்ளுவார்.***